# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 3

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 90 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 20 | | | |
| 2 | 05 | | | |
| 3 | 03 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 12 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 10 | | | |
| 8 | 10 | | | |
| 9 | 10 | | | |
| 10 | 15 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

எ+கா: அறநெறி நூல்களில் ஒன்று திருக்குறள் .

(திருக்குறள், புறநானூறு, சிலப்பதிகாரம்)

1. நெல் அறுவடை முடிந்ததும் ____________ நடைபெறும்.

(போட்டிகள், கூத்துகள், விளையாட்டுகள்)

2. ஒற்றுமை என்ற சொல்லின் எதிர்க்கருத்து ____________

(வேற்றுமை, வாய்மை, உண்மை)

3. இனியன் கீழே கிடந்த பையை எடுத்துக்கொண்டு ____________ சென்றான்.

(அஞ்சல்நிலையம், காவல்நிலையம், மருத்துவநிலையம்)

4. அதியமான் ____________ நெல்லிக்கனியைக் கொடுத்தார்.

(ஔவையாருக்கு, மோசிகீரனாருக்கு, பாவேந்தருக்கு)

5. நாளை பிறந்தநாள் விழாவில் நண்பர்கள் பாட்டுப் ____________ .

(பாடினர், பாடுகின்றனர், பாடுவார்கள்)

6. அடங்காப்பற்று என்று அழைக்கப்பட்ட இடம் ____________ .

(யாழ்ப்பாணம், வன்னி, கண்டி)

7. உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல் ____________ .

(திருக்குறள், சிலப்பதிகாரம், புறநானூறு)

8. மாமா ____________ என்று நடந்து சென்றார்.

(படபட, விறுவிறு, மடமட)

9. பாடற்போட்டி என்பதைப் பிரித்தால் ____________ .

(பாடல் + போட்டி, பாடற் + போட்டி, பாட்டு + போட்டி)

10. **பழமொழி :** ____________________ பயிரை முளையில் தெரியும்.

(விலையும், விழையும், விளையும்)

11. முத்தமிழில் ஒன்று ____________________ .

(இசை, சிற்பம், நடனம்)

12. "ஏலையேலோ தத்தெய்தாம்..." எனத் தொடங்கும் நாட்டார் பாடல்

____________________________ .

(கடல்தொழில் பாடல், தாலாட்டுப்பாடல், அறுவடைப்பாடல்)

13. நாங்கள் ____________________ வீடு அழகானது.

(பாடிய, ஓடிய, கட்டிய)

14. இலை உதிர்காலத்திற்குப் பின்னர் வரும் காலம்____________________.

(கோடைகாலம், பனிகாலம், இலைதளிர்காலம்)

15. மக்களுக்குப் பகுத்தறிவு தோன்றப் பரப்புரை செய்தவர்

____________________ .

(பாரதியார், இளங்கோவடிகள், பெரியார்)

16. செய்தி + தாள் என்பதைச் சேர்த்தால் ____________________ .

(செய்தித்தாள், செய்திதாள், செய்தாள்)

17. "பொன்பூச் சொரியும்..." என்ற பாடலைப் பாடியவர்

__________________________ .

(பாவேந்தர், சின்னத்தம்பிப்புலவர், ஔவையார்)

18. பாட்டியால் கதை ____________________ .

(கூறினார், கூறுவார், கூறப்பட்டது)

19. தை முதலாம் நாள் கொண்டாடப்படுவது ____________________ .

(தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், பட்டிப்பொங்கல்)

20. 50 என்ற எண்ணை எழுத்தில் எழுதினால் ____________________ .

(அம்பது, அய்ம்பது, ஐம்பது)

| புள்ளிகள் 20 |
|---|

## 2) கீறிட்ட இடத்தை மிகப்பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| ஏறஇறங்க | குடுகுடு | மடமட |
| இரவுபகலாக | ~~கலகல~~ | பளபள |

**எ+கா:**

குழலி ___கலகல___ என்று சிரித்தாள்.

1. வெய்யிலில் கிடந்த கண்ணாடி ____________ என மின்னியது.
2. வன்னியா வீட்டுக்கு வந்த புதியவரை ____________ப் பார்த்தாள்.
3. நண்பன் ____________க் கண்விழித்துப் படித்தான்.
4. பாட்டன் ____________ என்று நடந்து செல்கின்றார்.
5. காவியன் தாகத்தினால் இளநீரை ____________ என்று குடித்தான்.

புள்ளிகள் 05

## 3) உறுப்பமைய எழுதுக.

ஊரோடு ஒத்து வாழ்.

______________________________

புள்ளிகள் 03

## 4) கீறிட்ட இடங்களில் மிகப் பொருத்தமான சொற்களை வைத்து எழுதுக.

| செய்து | சிறந்த | ~~தொலைந்த~~ | எறிந்து | நிறைந்து | நீந்தி |
|---|---|---|---|---|---|

**எ+கா:** எழிலன் தொலைந்த நூலைக் கண்டெடுத்தான்.

1. சிறுவர் வெள்ளத்தில் கல் ______ விளையாடினர்.

2. மரத்தில் இலைகள் ______ இருந்தன.

3. நீச்சற் குளத்தில் பிள்ளைகள் ______ப் பழகினர்.

4. அதியமான் ______ குணம் உடையவன்.

5. இலக்கியன் பனிப்பாவை ______ விளையாடினான்.

புள்ளிகள் 05

5) பொருத்தமான முடிக்கும் சொல்லை எழுதி, வாக்கியங்களை (சொல்லியங்களை) நிறைவு செய்க.

எ+கா:

புறநானூறு தமிழரின் வீரத்தைக் கூறுகின்றது.

1. கலைவிழாவில் நேற்றுச் சேரனால் நாடகம் ______________.

2. அறிவன் நாளை ஊருக்குச் ______________.

3. மோசிகீரனாருக்குச் சேரமான் பணிவிடை ______________

4. நாங்கள் நாளும் பழங்கள் உண்ண ______________.

5. பழமொழி:

ஒன்று பட்டால் உண்டு ______________.

6. நாங்கள் என்றும் பொய் சொல்லக் ______________.

புள்ளிகள் 12

## 6) கட்டங்களில் உள்ள சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| எ | று | ம் | பு | து | ம் | பி |
| நு | மு | ய | ல் | ஒ | கு | தே |
| ள | க | ர | டி | ட் | தி | னீ |
| ம் | | ஈ | | ட | ரை | |
| பு | வ | ண் | டு | க | நா | ய் |
| சி | ங் | க | ம் | ம் | பு | லி |

**சிற்றுயிரிகள்**

எ+கா: எறும்பு

1. ______
2. ______
3. ______
4. ______
5. ______

**விலங்குகள்**

ஒட்டகம்

1. ______
2. ______
3. ______
4. ______
5. ______

புள்ளிகள் 10

## 7) தரப்பட்டிருக்கும் சொற்களில் மிகப் பொருத்தமானதைத் தெரிந்து; கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | |
|---|---|---|
| புள்ளிகளைக் | தோகையை | நீண்ட |
| கொண்டை | ~~அழகான~~ | கழுத்து |

மயில் மிகவும் அழகான பறவை. அது எல்லோரையும் கவரும் அழகிய தோற்றம் கொண்டது. மயிலின் தலையில் சிறிய ________________ ஒன்று உள்ளது. அதன் ________________ நீண்டு மெலிந்து காணப்படும். அதன் இறகுகள் பல வண்ணப் ________________ கொண்டுள்ளன. ஆண் மயிலுக்கு ________________ தோகை உண்டு. அது தன் ________________ விசிறி போல விரித்து ஆடும். அக்காட்சி மிகவும் அழகாக இருக்கும்.

புள்ளிகள் 10

## 8) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக (சொல்லியமாக) எழுதுக.

எ+கா:

காணப்படும் / யாழ்ப்பாணத்தில் / கூடுதலாகக் / பனைமரம்

பனைமரம் யாழ்ப்பாணத்தில் கூடுதலாகக் காணப்படும்.

1. பெண் / தமிழ்ப் / ஔவையார் / புலவர்

   ________________________________________ .

2. காட்டுக்குச் / அதியமான் / வேட்டையாடக் / சென்றான்

   ________________________________________ .

3. சிறுமி / மிகவும் / நல்ல / ஆதிரை

   ________________________________________ .

4. இருக்கும் / பார்க்க / பனிக்கரடி / அழகாக

   ________________________________________ .

5. கோடை / செல்வர் / விடுமுறைக்குச் / சுற்றுலாச்

   ________________________________________ .

| புள்ளிகள் 10 |
|---|

## 9) பந்தியைப் படித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

எமது பெற்றோர் எங்கள் மீது மிகவும் அன்புள்ளவர்கள். எங்கள் கல்வியில் அக்கறை உள்ளவர்கள். எங்களுக்கு நல்ல துணையாக இருப்பர். அவர்கள் எங்களுக்குத் தேவையான அனைத்தையும் வாங்கித்தருவர். நாங்கள் என்றும் நல்ல பிள்ளைகளாக வாழவேண்டும் என்று எமது பெற்றோர் விரும்புவர். எங்களுக்கு நோய் வந்தால் அவர்கள் தூங்காமல் விழித்திருப்பர். நோயில் இருந்து எங்களைக் காப்பர். எமது பெற்றோரை நாம் மதித்து நடத்தல் வேண்டும். பெற்றோர் கூறும் அறிவுரைகளைக் கேட்க வேண்டும்.

**எ+கா:**

எங்கள் மீது அன்புள்ளவர்கள் யார்?

எங்கள் மீது அன்புள்ளவர்கள் பெற்றோர்.

1. எமது பெற்றோர் எதில் அக்கறை உள்ளவர்கள்?

______________________________

2. எமக்கு நோய் வந்தால் தூங்காமல் விழித்திருப்போர் யார்?

______________________________

3. எதில் இருந்து பெற்றோர் எம்மைக் காக்கின்றனர்?

______________________________

4. யாரை நாம் மதித்து நடக்க வேண்டும்?


______________________________

5. நாம் எதைக் கேட்க வேண்டும்?

______________________________

புள்ளிகள் 10

## 10) படத்தைப் பார்த்து ஐந்து வாக்கியங்கள் (சொல்லியங்கள்) எழுதுக.



1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

புள்ளிகள் 15